# தமிழ் இணையக் கல்விக்கழகம்
# சென்னை – 600 025.

## இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)
## முதலாம் ஆண்டு – முதற்பருவம்

## ஜனவரி – பிப்ரவரி 2026
## C012 – இடைக்கால இலக்கியம்

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக. (15x1=15)**

1. ஒருவனது கல்வித் தகுதியை ஆராயாது குற்றம் கருதுதல் எதைப் போன்றது?
2. நோய்கள் யாரிடத்தில் சுலபமாய்ச் சேரும்?
3. நிறைகுடம் நீர் தளும்பல் இல்–பழமொழி உணர்த்தும் கருத்து யாது?
4. புலி முகத்து உண்ணி பறிக்கும் செயல் எதற்கு ஒப்பிடப்படுகிறது?
5. கள்ளி வயிற்றில் பிறக்கும் நறுமணப் பொருள் எது?
6. அழகும் இளமையும் எதனால் கெடும்?
7. பெரியவர்கள் எதைக் கண்டு அஞ்சுவார்கள்?
8. பரணியின் உறுப்புகள் நான்கினை எழுதுக.
9. தமிழில் கிடைக்கும் முதல் பிள்ளைத்தமிழ் நூல் எது?
10. குமரகுருபரர் இயற்றிய மூன்று சிற்றிலக்கியங்களை எழுதுக.
11. பள்ளு இலக்கியங்கள் மிகச் சிறப்புடன் உருவான காலம் எது?
12. சதக இலக்கியங்களின் நோக்கங்கள் இரண்டினை எழுதுக.
13. சமண சமயம் சார்ந்த பிற்கால அற நூல்கள் இரண்டினை எழுதுக.
14. நீதிநூல், பெண்மதிமாலை ஆகிய நூல்களின் ஆசிரியர் யார்?
15. எத்தொழிலுக்கு ஒப்பான தொழில் எதுவுமில்லை?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

16. மனித வாழ்க்கைக்கு அடிப்படையானவர் என்று உலக நீதியில் கூறப்படுபவர் யாவர்?
17. நட்பில் பிரிவு கூடாது என்பதற்கு நன்னெறி கூறியுள்ள உவமையை விளக்குக.
18. இரண்டு கால் மாடுகள் என்று காரியாசன் யாரைச் சொல்கிறார்?
19. நாய் பெற்ற தெங்கம் பழம் – பழமொழியை விளக்குக.
20. எறும்பிடமும் தூக்கணாங்குருவியிடமும் நாம் கற்றுக் கொள்ள வேண்டியவைகளை எழுதுக.
21. கல்விச் செல்வத்தின் சிறப்புகளை எழுதுக.
22. அபிராமியின் கடைக்கண்கள் என்னவெல்லாம் தரும்?
23. உயர்ந்த பண்புகள், தீய பண்புகள் குறித்து தண்டலையார் சதகம் குறிப்பிடுவனவற்றைக் கூறுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

24. (அ) சிற்றிலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றித் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்ப்பதாய்ச் சிற்றிலக்கியங்கள் விளங்குகின்றன என்பதை ஆதாரத்துடன் நிறுவுக.

25. (அ) மீனாட்சி அம்மையின் பெருமைகளைக் குமரகுருபரரின் படைப்புகளின்வழி விவரிக்க.

(அல்லது)

(ஆ) வாழ்க்கையில் என்றும் நிலைத்திருக்கும் உண்மைகளை நாலடியார், நான்மணிக்கடிகை வழி கண்டறிந்து விளக்குக.

26. (அ) பிற்கால அற நூல்கள், மனிதன் அறவழியில் வாழ, வழி நடத்துகின்றன என்பதைச் சான்றுடன் நிரூபிக்க.

(அல்லது)

(ஆ) தனிமனிதன், குடும்பம், சமுதாயம் என்ற நிலைகளில், சிறந்த வாழ்க்கைக்கு வழிகாட்டும் அற இலக்கியமாகச் சதக இலக்கியங்கள் விளங்குகின்றன என்பதை விளக்குக.